**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி, திண்டுக்கல் மாவட்டம்.**

**முன்னிலை : திருமதி. கா. பாரதி, M.L.,**
**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பழனி.**

**2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12 ஆம் நாள் வியாழக்கிழமை**

**(திருவள்ளுவராண்டு 2056 ஸ்ரீவிசுவாவசு வருடம் மாசி மாதம் 28 ஆம் நாள்)**

**அசல் வழக்கு எண்.254/2024**

[TNDG07 – 000902 – 2024]

பழனி வட்டம், மானூர் கிராமத்தில் இருக்கும் கனரா வங்கி கிளை, அதன் மேனேஜர் மூலம். --- வாதி

/எதிர்/

1. திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், மானூர் கிராமம், வடக்குத் தெரு, கதவு எண்.1033/5–ல் இருக்கும் தெண்டபாணி என்பவரின் மகன் சுமார் 32 வயதுள்ள ராமகிருஷ்ணன்.
2. திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், மானூர் கிராமம், வடக்குத் தெரு, கதவு எண்.1033/5–ல் இருக்கும் ராமசாமி என்பவரின் மகன் சுமார் 32 வயதுள்ள தெண்டபாணி.

--- பிரதிவாதிகள்

தாவா தொகை ரூ.4,44,079/–ம், அதற்கு பிராது தேதி முதல் தொகை முழுவதும் செலுத்தும் வரை 10.55 சதவீதம் பின்வட்டியும், தாவா செலவுத் தொகையையும் சேர்த்து வாதி வங்கிக்கு பிரதிவாதிகளை செலுத்திவைக்கக்கோரி வாதி வங்கியால் இந்த அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மதிப்பு விபரம் :–** ரூ.4,44,079/–. அதற்கு நீதிமன்ற முத்திரைக் கட்டணம் ரூ.13322/– பிரிவு 22ன்படி கட்டப்பட்டுள்ளது.

வழக்கு மூலம் : 10.12.2009, 14.07.2011, 03.06.2014, 07.05.2016, 02.10.2018, 12.08.2019 மற்றும் 10.06.2022.

வழக்கு தாக்கல் செய்த நாள் : 27.11.2024

இந்த வழக்கானது 20.09.2024 ஆம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு 03.03.2026 ஆம் தேதியன்று என் முன்னர் இறுதி விசாரணைக்காக வந்தபோது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர் S. பழனிச்சாமி அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகள் தரப்பில் அழைத்தும் ஆஜராகாததால்

தோன்றாத்தரப்பினர்களாக இருந்தும், வாதி தரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**தீர்ப்பாணை**

1. வாதி வங்கிக்கு, பிரதிவாதிகள் தனித்தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாவாத் தொகை ரூ.4,44,079/-ஐயும், மேற்படி தொகைக்கு தாவாத் தேதியான 27.11.2024 முதல் தீர்ப்பாணை தேதி வரை ஆண்டொன்றுக்கு 9 சதவீதம் வட்டியும், தீர்ப்பாணை தேதியிலிருந்து தொகை முழுவதும் வசூலாகும் தேதி வரை ஆண்டொன்றுக்கு 6 சதவீதம் பின்வட்டியும் செலுத்திவைக்க வேண்டுமென்று கட்டளையிடப்படுகிறது.

2. தாவா செலவு தொகையாக வாதி வங்கிக்கு, பிரதிவாதிகள் ரூ.17,422/- செலுத்திவைக்கவேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

**செலவுத் தொகை விபரம்**

| | வாதிக்கு |
|---|---|
| | ரூ. பை |
| 1. நீதிமன்ற முத்திரைக் கட்டணம் | 13322 .00 |
| 2. விண்ணப்பத்திற்கு | --- --- |
| 3. வக்காலத்திற்கு | 10 .00 |
| 4. வழக்கறிஞர் கட்டணம் | 3995 .00 |
| 5. கட்டளை சேர்ப்பிக்க | 70 .00 |
| 6. கட்டளை தயாரிக்க | 10 .00 |
| 7. ஆதரவுகளுக்கான வில்லை | 5 .00 |
| 8. வாதுரைக் கட்டணம் | 10 .00 |
| | **17422 .00** |

2026ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12ஆம் நாளிட்ட தீர்ப்பாணையில் என்னால் கையொப்பமிடப்பட்டு, இந்நீதிமன்ற முத்திரையுடன் வழங்கப்பட்டது.

K. BHARATHI
Digitally signed by K. BHARATHI
Date: 2026.03.23 16:37:14 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பழனி.**